அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை




ஐப்பசி 2011
ISSN 1837-6460
மலர் 3 இதழ் 10

# "ஸ்ரீலங்காவின் பொறுப்புடமை, பொதுநலவாய நாடுகளின் பொதுநீதி"

**சர்வதேசக் கருத்தரங்கு, 20 புரட்டாதி 2011**




அவுஸ்திரேலிய தமிழர் பேரவையும், உலகத் தமிழர் பேரவையும் இணைந்து நடாத்திய இக் கருத்தரங்கில், சர்வதேச அரசாங்கங்கள், ஏனைய அமைப்புகள், குறிப்பாக பொதுநலவாய நாடுகளின் அமைப்பு ஆகியன ஸ்ரீலங்காவில் நீதியும், நல்லிணக்கமும், நிரந்தர சமாதானமும் ஏற்பட, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

கடந்த ஒக்டோபர் 20 - 22ந் திகதிவரை மூ ன்று நாட்கள் "ஸ்ரீலங்காவின் பொறுப்புடமை, பொதுநலவாய நாடுகளின் பொதுநீதி" என்பன தொடர்பாக சிட்னியில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் சர்வதேச அரங்கின் சிறந்த நல்லறிஞர்கள், பேச்சாளர்கள் உட்பட இங்கு உள்ள பிர-தான அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள், செனட்டர்கள் பலரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

பேர்த் நகரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில், 2013ல் அடுத்த மாநாட்டினை ஸ்ரீலங்காவில் நடாத்துவதற்கு தீர்மானிப்பதற்கு ஒருவாரம் முன்னர்





தொடர்ச்சி 2 ம் பக்கம்

## “ஸ்ரீலங்காவின் பொறுப்புடமை, பொதுநலவாய நாடுகளின் பொதுநீதி”

...தொடர்ச்சி



சிட்னி கருத்தரங்கில், ஸ்ரீலங்காவில் 2009ல் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாகவும், அதனைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் வன்முறைகள், மனிதஉரிமை மீறல்கள் பற்றியும் விரிவாக ஆராய்வதற்கு நல்ல வாய்ப்பாக கருதப்பட்டது.

இக் கருத்தரங்கில் சர்வதேச ஜூரர்கள் கமிஷன் அவுஸ்திரேலிய அவையின் தலைவர் ஜோன் டோவ்ட் QC, முன்னாள் அவுஸ்திரேலிய ராஜதந்திரி புரூஸ் ஹைய்,




பிரிட்டனின்தலைசிறந்த சட்ட வல்லுனர் ஜெ ஜப்ரி றொபேட்சன் QC, ஆகியோர் உட்பட பல்துறை நிபுணத்துவ அறிஞர்கள்,கல்வியாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என பல தரப்பட்ட பேராளர்கள் அவுஸ்திரேலியா உட்பட உலகின் பல பாகங்களிலும் இருந்து வருகைதந்து பயனுள்ள பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

அண்மைக் காலமாக ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இனஅழிப்புக்கொடுரங்கள் தொடர்பான விழிப்புணர்வுஅவுஸ்திரேலிய அரசமட்டத்தில் ஏற்பட்டுள்ளது. சமஷ்டிப் பொலீஸார் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளைத் தொடங்கியுள்ளதால், தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் இம் மாநாடு நடைபெற்றதினால் அது மிகவும்




முக்கியத்துவம் பெற்றது.

தமிழ்த தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சரவணபவான் எமது மக்களின் பிரச்சினைகள், அங்குள்ள களநிலைமைகள் பற்றி விரிவாக பேசினார். அங்கு இராணுவ ஆட்சியில் வடக்கு கிழக்குத் தமிழர்கள் அனுபவிக்கும் இனனல்களைப் பற்றி எடுத்துக் கூறினார்.

தொடர்ச்சி 3 ம் பக்கம்

## "ஸ்ரீலங்காவின் பொறுப்புடமை, பொதுநலவாய நாடுகளின் பொதுநீதி"

...தொடர்ச்சி




அவுஸ்திரேலிய தமிழர் பேரவை தவிசாளர் கலாநிதி ராஜ் ராஜேஸ்வரன் அவர்கள் மிகுந்த பயனள்ள பேருரையினை நிகழ்த்தி, போராளர்களின் நன்மதிப்பை பெற்றுக் கொண்டார்.

மேற்படி கருத்தரங்கில் பங்குபற்றிய முக்கிய பேராளர்களின் கருத்துப்படி, ஸ்ரீலங்கா அரசு போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நிராகரித்துவரும் செயற்பாடு, அங்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பெரும் தடையாக உள்ளது. அத்துடன் அங்கு தொடர்ந்து நடைபெற்றுவரும் காணாமல் போதல், கற்பழிப்பு, வன்முறைகள் போன்ற தொடர்சியான மனித உரிமை மீறல்கள், தமது பாரம்பரிய தாயக மண்ணாம் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் முஸ்லிம் மக்களை ஓரங்கட்டுதல், பாரபட்சம் காட்டுதல் போன்ற செயற்பாடுகள் போன்றவற்றால் களநிலமைகள் மோசமடைந்து வருகின்றன.

கருத்தரங்கில் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள்:

- ஸ்ரீலங்காவின் நீண்டகால இனக்கலவரம் முடிவுக்கு வந்ததினைத் தொடர்ந்து, அங்கு சகல இணங்களுக்குமிடையில்



உண்மையான இணக்கப்பாடு ஏற்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய செயற்பாடு சுயாதீன சர்வதேச பொறிமுறைகளின் அடிப்படையில் நிறுவப்படல் வேண்டும்

- போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இருதரப்பினரும் முறையான நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.



-

ஐநா நிபுணர் குழு அறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட விடயங்கள்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# மேற்கு அவுஸ்திரேலிய மாநில அறிக்கை





யாவும் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும்.

- முறையான அரசியல் தீர்வு முன்வைக்கபட்டு அவற்றின் மூலம் அடிப்படை ஜனநாயக உரிமைகள், அரசியல் பிரதிநிதித்துவம் முறையாக பேணப்படல் வேண்டும்.

மாநாட்டின் இறுதியில் அவுஸ்திரேலிய தமிழர் பேரவை தவிசாளர் கலாநிதி ராஜ் ராஜேஸ்வரன் அவர்களும், உலகத் தமிழர் பேரவை தலைவர் வண பிதா கலாநிதி எஸ் ஜே இம்மானுவல் அவர்களும் கூட்டறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தனர்.

♦

## அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரத்தில் "கவனயீர்ப்பு நிகழ்வு, ஊர்வலம்







அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரத்தில் , இன்று முதல் (ஒக்ரோபர் மாதம் 28ம் திகதி தொடக்கம்) 30ம் திகதிவரை பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. நாடுகள் , அமைப்புக்கள் , நிறுவனங்களுக்கு இடையிலான சனநாயக விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக , நிறுவப்பட்ட பொதுநலவாய நாடுகளுக்கான இக்கூட்டத்தொடரில், சிறிலங்காவின் அதிபர் மகிந்த ராஜபக்சவும் கலந்து கொண்டுள்ளார்.

இந்நிலையில் இன்று ஒக்ரோபர் 28ம் திகதி வெள்ளிக்கிழமை பேர்த் நகரத்தில் அவுஸ்திரேலியாவின் பல பகுதிகளில் இருந்து வந்த தமிழ் உணர்வாளர்கள், அவுஸ்திரேலியாவின் ஏனைய சமூக அமைப்புக்களுடன் இணைந்து கவனயீர்ப்பு நிகழ்விலும், ஊர்வலத்திலும் பங்குகொண்டிருந்தார்கள். செய்தி

# சோகம் .. I mean CHOGM

கால் வைக்கும் இடமெல்லாம் கண்ணிவெடி!
கால் பூட்ஸ் கலைத்தது கன்னியர் மடி!
வடக்கும் கிழக்கும் இனி இணையுமாடி?
வேடிக்கை பார்க்குமா இதை உலகுமினி ?

சிங்களம் தான் வென்றதாய் கொக்கரிப்பு
எங்களைக் கொன்றதாய் தமிழன் தத்தளிப்பு!

,தில் உண்மை இல்லை என இன்றுவரை
சொன்னதைச் சொல்லுதே இந்தியக் கிளி !

சோகம் ..

**I mean CHOGM இங்கு நடக்கிறது**
பொதுநலவாய நாடுகள் .. நலம் நாடும்
தன் நலம் தேடும் **தலைப்பாகைக்கு**
**தலையாட்ட வேண்டும் ..கோட்பாடு !**

சிங்கள தேசத்தைக் காக்கும் பணி
சிறப்பாகச் செய்திடும் அவர்கள் அணி
மௌனம் காப்பதே மற்றவர் தொழில்
மடையனுக்கும் புரியும் **..உடையவன் பழி !**

ஊழல் கரையான்கள் ஊது குழல்
மதப் பாம்புகள் .. மகுடிக்கும் மயங்கி
வல்லரசுகளோ வழங்கும் பணி
கொல்லரசுக்கும் அது வாய்த்ததினி !

ஆடுகள் மாடுகள் இந் நாட்டை விட்டு




அனுப்பப் படுவதோ ..டொலருக்கப்பா !
அனுப்பப் படுகின்ற நாட்டில் **அவை**
**ஆறுதலாகச் சாகவும் வேண்டும் !**

பாராளுமன்றப் படிக்கட்டில் கூட
பரிந்துரைகளோ **..எங்கள் செலவிலப்பா !**

,து தேவையா இந்த நாட்டுக் கென்ற
கேள்விதான் **எந்தச் சுப்பனுக்கும் !**

பிணங்களின் மேலே விழுந்து எழுந்து
பிள்ளைகள் என்ன வரம் கேட்கும் ?
பணம் தானே!.. பத்தும் செய்யட்டும்

**,னமானம் ..தமிழா .. எழுந்து நிற்போம் !**

ஓலமிடும் வழக்கத்தை நாம்
எப்போதோ தொலைத்து விட்டோம்..
**காலமிடும் கட்டளைக்குக்**
**காது கொடுக்க .. அழைக்கின்றோம் !**

CHOGM இனி எந்த நாட்டில் என்ற
சங்கதி எல்லாம் யாருக்கு வேண்டும் ?
**சுப்பன் கூட சும்மாவா சொன்னான் ..**
**சுப்பன் கூட சும்மாவா சொன்னான் .!**

**இந்தியத்துக் கிளி போலத்தானே**
**இந்த நாட்டுக் கிளியின் பேச்சும் !**

**ஆக்கம்**



# அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை



*Postal Address:*
*P.O. BOX 22 COMO WA 6952 AUSTRALIA*
*Tel: 1300 660 629*
*Web: http://www.australiantamilcongress.com*

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரே அரசியலில் ஆர்வம் காட்டிவந்திருக்கின்றார்கள். அவர்களும் தனித்தனியாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் முயற்சிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதுவரை காலமும் அமைதியாக இருந்த மக்களையும், இளஞ்சந்ததியினரையும் அரசியலில் ஈடுபட வைத்து எமது தமிழ்ச் சமூகத்தின் ஒருங்கிணைந்த நோக்கத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுவது எமது கடமை.

அவுஸ்திரேலிய தமிழ் பேரவை பல அரசியல் வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது, எமது அமைப்பினரின் நோக்கம் நிறைவேறுவதற்க்கு எமது பேரவையின் அங்கத்துவர்களின் எண்ணிக்கையும், பொருள் பலமும் முக்கியமானது என்பது மறுக்கவோ, மறைக்கமுடியாத உண்மை. அதனால் உங்கள் ஒவ்வொருவரையும் எமது பேரவையில் இணைந்து எம்மைப் பலப்படுத்தும்படி வேண்டி நிற்கின்றோம். எமது பேரவையின் எதிர்காலத்தை வழி நடத்தும் பொறுப்பு ஒவ்வொரு அங்கத்தவர்களின் கைகளிலும் உள்ளது.

உங்களது உதவி சிறியதாகவோ பெரியதாகவோ இருப்பினும் எமது நீண்ட கால, இடைத்தர கால, குறுகிய கால குறிக்கோள்களை அடைவதற்கு மிக முக்கியமானது.

நீதிக்காகவும் அமைதிக்காகவும் நாம் தொடங்கிய பயணத்தில் உங்களையும் உங்களது நண்பர்களையும் உறவினர்களையும் இணைத்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

எமது தேசிய சஞ்சிகைக்கான கட்டுரைகள் செய்திகளை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

newsletter@australiantamilcongress.com

பொறுப்பு **மறுப்பு**

இந்த வெளியீட்டில் வரும் கட்டுரைகள், ஆக்கங்கள் அனைத்தும் அவுஸ்திரேலியத் தமிழர் பேரவையின் கொள்கைகளையோ நோக்கங்களையோ பிரதிபலிப்பனவல்ல. அவை அந்தந்த எழுத்தாளர்களின் கருத்துக்களை பிரதிபலிப்பனவாகவே இருக்கும்.

## அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை:
## சமாதானத்தையும் நீதியையும் நோக்கிய அறப்போர்

**எம் கொள்கை**

“மக்களால் மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட மக்களின் பேரவையே அவுஸ்திரேலியத் தமிழ் பேரவையாகும். எமது கொள்கையானது நீதியையும் சமாதானத்தையும் அடிப்படையாக வைத்து எமது மக்களின் வளமான, சுதந்திரமான, சமத்துவமான, பாதுகாப்பான அமைதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது மக்களின் ஒருங்கிணைந்த குரலாக ஒலிப்பதுவாகும்.”

**எம் இலட்சியம்**

“அவுஸ்திரேலியத் தமிழ் பேரவை அவுஸ்திரேலிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்களின் ஆக்க பூர்வமான பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும், தமிழர்களுக்கு முக்கியானற்றை வெளிக் கொணர்வதாகவும், அவுஸ்திரேலியப் பண்புகளை நிலைநிறுத்துவதாவும், மற்றைய சமூகங்கள், அரசுகள், அமைப்புக்கள் அனைத்தையும் தமிழர்களின் சமூக, பண்பாட்டு, அரசியல் அக்கறைகள், கவலைகளில் ஈடுபடுத்துவதாகவும் அமைவதே எம் இலட்சியம்.”

**எம் குறிக்கோள்**

“எமது குறிக்கோளானது உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகக ஒருங்கிணைந்த குரல் கொடுப்பது, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிய அறிவியலை மக்களிடையே ஏற்படுத்துவது, எமது மக்களின் பாதுகாப்பிற்கும், வளமையான வாழ்விற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது, எமது எதிர்கால சந்ததியினரிற்கு எமது நாட்டில் நடந்த இனப்படுகொலையைப் பற்றி எடுத்துக்கூறுவது என்பவையாகும்.”